2278

JNNI

025779

29 MAY 2009

## சுருக்கம்

தாம்பரம் நகராட்சி – பாதாள சாக்கடைத் திட்டம் – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ், பாதாள சாக்கடைத் திட்டத்தை ரூ.16096.59 இலட்சங்கள் செலவில் செயல்படுத்துதல் – நிர்வாக அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (நநி3) துறை

அரசாணை (நிலை) எண். 80 நாள் 28.05.2009.

திருவள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி

படிக்கப்பட்டது:

நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந. க. எண். 60167/ 2008/ JNNI, நாள் 2.3.2009.

------

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் தாம்பரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு, விரிவான திட்ட அறிக்கை சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் தயாரிக்கப்பட்டு, அவ்வறிக்கை மாநில அளவிலான உயர்நிலைக் குழுவின் ஒப்புதலுடன், ஒருங்கிணைப்பு முகமையான தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் மூலம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு மத்திய அனுமதி அளிக்கும் மற்றும் கண்காணிப்புக் குழுவினால் இவ்விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது என்றும், இவ்வொப்புதலின் அடிப்படையில் தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் இத்திட்டத்தை செயல்படுத்த கடன் மற்றும் மானியங்களை வழங்க ஒப்புதல் கடிதம் அளித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2. தாம்பரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான விவரிப்பை நகராட்சி நிர்வாக இயக்குநர் பின்வருமாறு அளித்துள்ளார் :-

| வ. எண். | சிப்ப விபரம் | உத்தேச செலவு (இலட்சங்களில்) |
|---|---|---|
| 1 | சேகரிப்பு முறை அளித்தல், நீரேற்று நிலையம் கட்டுதல் மற்றும் மண்டலங்களில் நீரேற்றுக் குழாய்களை பதித்தல் | 11891.50 |
| 2 | உடைத்த சாலையை சீராக்க கட்டணம் | 3189.27 |
| 3 | பயன்பாடுகளின் இடமாற்றச் செலவு | 556.78 |
| 4 | எதிர்பாராச் செலவினம், மின்சார கட்டணங்கள் மற்றும் நிர்வாகச் செலவுகள் | 459.04 |
| | மொத்தம் | 16096.59 |

3. தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள கடன் மற்றும் மானிய ஒப்புதல் கடிதத்தின்படி நிதியாதாரங்களின் விபரத்தையும் நகராட்சி நிர்வாக இயக்குநர் பின்வருமாறு அளித்துள்ளார் :-

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | உத்தேச செலவு | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் பங்கு மதிப்பீட்டில் 50% | | கடனை திருப்பிச் செலுத்தும் காலம் | நிதி நிறுவனத்தின் பங்கு | உள்ளாட்சி அமைப்பின் பங்கு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | வட்டியில்லா கடன் மதிப்பீட்டில் 10% | மானியம் மதிப்பீட்டில் 40% | | | |
| 1 | தாம்பரம் நகராட்சிக்கு பாதாள சாக்கடை வசதி அளித்தல் | 16096.59 | 1609.66 | 6438.64 | 7 years | 4024.14 (MIDF) (பெருநகர உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதியம்) | 4024.14 |

மேலும், தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் ரூ.4024.14 இலட்சங்களை, பெருநகர உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதியத்திலிருந்து (MIDF) வழங்க ஒப்புதல் அளித்துள்ளதாகவும், ரூ.4024.14 இலட்சங்களை பொதுமக்களிடமிருந்து வைப்புத் தொகை பெறுவதன் மூலமும், சொந்த வருவாய் மூலமாகவும் தாம்பரம் நகராட்சி வழங்கவுள்ளதாகவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் குறிப்பிட்டுள்ளார்.

4. மேற்கண்ட நிதியாதாரங்களின் அடிப்படையில், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் தாம்பரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை ரூ.16096.59 இலட்சங்கள் செலவில் செயல்படுத்துவதற்கான நிர்வாக அனுமதியை நகராட்சி நிர்வாக இயக்குநர் கோரியுள்ளார்.

5. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, மேலே பத்தி 3-ல் குறிப்பிட்டுள்ள நிதியாதாரங்கள் மற்றும் விவரங்களின் அடிப்படையில் தாம்பரம் நகராட்சியில் ரூ.16096.59 இலட்சங்கள் செலவில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான நிர்வாக அனுமதியை அளித்து ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-600 005.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம், சென்னை - 600 018,
நகராட்சி ஆணையர், தாம்பரம் நகராட்சி.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-600 005.
மாநில கணக்காயர், சென்னை - 600 018.
மாநில கணக்காயர், சென்னை - 600 018. (பெயர் உறையில்)
உள்ளுறை தணிக்கை அலுவலர், மாநில கணக்காய்வுத் துறைத் தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

<u>நகல்:</u>
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை-600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (வரவு செலவு / அநமு.II / நநி.2) துறை, சென்னை - 600 009.
நிதித் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்) துறை, சென்னை-600 009.
இ.கோ./உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/5/09
பிரிவு அலுவலர்.